# குறுந்தொகையிலும் குறளிலும் பிரிவாற்றாமை

# Non-Separation in Kurunthogai and Kural

***வி. கவிதா***
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, மொழிகள் புலம்
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா

**V. Kavitha**
*Research Scholar (Full Time)*
*Department of Tamil*
*Vels Institute of Science, Technology & Advanced Studies (VISTAS), Chennai, India*

***முனைவர் அ. இருதயராஜ்***
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை, மொழிகள் புலம்
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா

**Dr. A. Irudhayaraj**
*Assistant Professor*
*Department of Tamil*
*Vels Institute of Science, Technology & Advanced Studies (VISTAS), Chennai, India*

## ஆய்வுச் சுருக்கம்

*உள்ளத்தின் போக்கை கட்டுப்படுத்த முயல்வதும், தன்னுடைய இயலாமைக்கு பொய்யுரைகளால் தன்னை தானே ஆறுதல் படுத்திக் கொள்வதும், சில நிகழ்வுகளை கண்ட வழி பழைய நினைவுகளை அசைபோடுவதுமான செயல்கள் பிரிவின் ஆற்றாமையை வெளிப்படுத்தும் கருவிகளாகும். சங்க இலக்கியங்களில் பெரும்பாலும் தலைவன் பொருளீட்டும் பொருட்டு வரைவிடை வைத்து பிரிந்து செல்லும் பிரிவே மிகுதி. அத்தகைய பிரிவினை ஏற்றுக் கொள்ளவும் தாங்கி கொள்ளவும் இயலாத நிலையில் தன்னுடைய ஆற்றாமையை தன் தோழியிடம் வெளிப்படுத்துவாள் தலைவி. தலைவனது பிரிவானது தலைவியின் உடலிலும் உள்ளத்திலும் ஊரார் அறிந்து அலர் தூற்றும் படியான நிலையையும் ஏற்படுத்தி விடுவதுண்டு. அந்நிலையை தவிர்க்க தலைவி தன்னைத்தானே ஆற்றுவித்துக் கொள்ளும் நிலையைக் குறித்து பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் முதன்மை நூலான திருக்குறளும், எட்டுத்தொகை நூல்களுள் ஓன்றான குறுந்தொகையும் தெளிவாக விளக்குவதை காணலாம்.*

***திறவுச் சொற்கள்:*** *சைவம், பன்னிரு திருமுறை, திருச்சிராப்பள்ளி, உள்ளடக்கங்களும் வரலாறும்*

## Abstract

*The attempt to control the flow of thoughts, the act of consoling oneself with false reassurances due to one's inability, and the act of disturbing old memories by recalling certain past events, are tools that reveal the helplessness of separation. In Sangam literature, separation is often portrayed as the most intense form of sorrow, with the lover departing for the sake of material gain. In such a situation, the heroine, unable to endure or accept the separation, expresses her helplessness to her friend. The lover's departure causes distress, and the townspeople come to know of it, leading to gossip and accusations. To avoid this, the heroine tries to fortify herself emotionally, a theme clearly explained in important texts such as Thirukkural and Kurunthokai. These texts offer clear insights into the heroine's emotional state and her attempts to cope with the separation.*

**Citation**

Kavitha, V., and A. Irudhayaraj. "Non-Separation in Kurunthogai and Kural." *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 1, 2024, pp. 23–27.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20069286*

**ஆய்வு நோக்கம்**

*எட்டுத்தொகை நூல்களுள் நல்ல என்ற அடைமொழிக் கொண்ட குறுந்தொகையும் உலகப்பொதுமறையாம் திருக்குறளும் களவு கற்பு எனும் இன்ப சுவைகளைப்பற்றி எடுத்துரைப்பதில் எவ்வாறு ஒன்றிணைகின்றன என்பதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது. திருமணத்திற்கு முன்பான களவு வாழ்விலும் திருமணத்திற்கு பின்பு கற்பு வாழ்விலும் தலைவன் சில காரணங்களுக்காக பிரிந்து செல்வது என்பது இயல்பு. அத்தகைய பிரிவின் போது தலைவிக்கு ஏற்படும் துன்ப நிலைகள் பிரிவின் ஆற்றாமையாக எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை இவ்வாய்வுக் கட்டுரை விளக்குவதாக அமைகிறது.*

**அகப்பொருள் பாடல் விளக்கம்**

*மணப்பருவமுற்ற ஆணும் பெண்ணும் மனம் ஒருமைப்பட்டு இருவரும் ஒருவராய் ஒன்றி வாழும் நிகழ்ச்சியை "அகவொழுக்கம்" என்பர். அகவொழுக்கம் என்பதே அகத்திணை. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதி பொருள் நான்கனுள், இன்பம் ஒன்றனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பாடப் பெறுவன அகப்பொருள் பாடல்கள் ஆகும்*

**இலக்கிய இலக்கணங்களில் பிரிவின் தன்மைகள்**

***உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்***
***செய் தீர் காட்சி கற்பு சிறந்தன்று என***
***தா இல் நல் மொழி கிழவி கிளப்பினும்***
***ஆ வகை பிறவும் தோன்றுமன் பொருளே***

***(தொல் - களவியல் - நூ - 23)***

*எல்லாவற்றிலும் சிறந்த உயிரை விட மகளிர்க்கு நாணம் உயர்ந்ததாகும். அக்காரணத்தை விட கற்பு மிக உயர்ந்தது என முன்னோர் குறிப்பர். இந்த நிலையில் பிரிந்து சென்ற தலைவன் இருக்குமிடம் தேடி தலைவி செல்ல உபாயம் இல்லாத போதும் கடும் முயற்சி செய்து அவனை தேடி செல்வாள். பிரிவின் கொடுமை அத்தகையது.*

*பிரிவில் தலைவியின் அன்பை போலவே தலைவனின் அன்பும் அளவிடற்கரியது என்பதை பின்வரும் நூற்பா விளக்குகிறது.*

***வினைவயின் பிரிந்தோன் மீண்டு வருகாலை***
***இடைச்சுர மருங்கின் தவிர்தல் இல்லை***
***உள்ளம் போல உற்றுழி உதவும்***
***புள் இயல் கலி மா உடைமையான***

***(தொல்- கற்பியல் - 53)***

*பொருள் ஈட்ட பிரிந்த தலைவன் தலைவியை தேடி திரும்பி வரும்போது இடையில் ஏற்படும் காலநிலை மாற்றத்தையும் பொருட்படுத்தாது தன் உள்ளத்தின் வேகத்திற்கு ஈடு கொடுக்கும் வாகனமான குதிரை பூட்டிய தேரில் விரைந்து வருவான்.*

**பிரிவு காலத்தில் தலைவன் மீது கொண்ட கோபம்**

***"அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்***
***தேறியார்க்கு உண்டோ தவறு."***

***(குறள் 1154 )***

*முன்பு தலைவர் அருள் உடையவராய் உன்னைப் பிரியேன் அஞ்ச வேண்டாம் என்று கூறியவர் பின்னர்ப் பிரிந்து சென்று விட்டார். அவர் தெரிவித்த சொல்கேட்டு நம்பியிருக்கும் நமக்கு உண்டாகும் குற்றம் தான் என்ன என்று தலைவன் மீதுள்ள தன் கோபத்தை வெளிப்படுத்துகிறாள் தலைவி.*

*இக்கருத்தை ஒத்ததாக குறுந்தொகையின் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.*

***உள்ளின் உள்ளம் வேமே உள்ளா***
***திருப்பினெம் அளவைத் தன்றே வருத்தி***
***வான்றோய் வற்றே காமம்***
***சான்றோர் அல்லர்யாம் மரீஇ யோரே. (குறுந்தொகை - 102)***

*தலைவன் தன் துயரை அறியாமையால் அன்பின்மையும் ஊரார் அலர் தூற்றுவதை என்னது உரைத்தலின் நாணமின்மையும், மனைவியுடன் உலகியலை மரத்தலர் ஒப்புரவின்மையும் தான் குறித்த நாளில் வராமையால் வாய்மையின்மையும் உடைமையால் அவர் சான்றோர் அல்லர் என சாடுகிறாள் தலைவி.*

**பிரிவால் உயிர் வாடும் நிலை**

***"ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்***
***நீங்கின் அரிதால் புணர்வு." (குறள் - 1155)***

*என்னுடைய உயிரைக் காக்க விரும்பினால் அன்போடு அமைந்த காதலர் பிரிந்து போகாமல் இருக்க வேண்டும். அவ்வாறு பிரிந்து சென்றால் மீண்டும் என்னை கூடுவது என்பது இனி வாய்க்காதபடி என் உயிர் இறந்து படும் என்று தன் பிரிவாற்றாமையை வெளிப்படுத்துகிறாள் தலைவி.*

*இக்கருத்தை ஒத்ததாக குறுந்தொகையின் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.*

***இலங்குவளை நெகிழச் சாஅ யானே***
***உளெனே வாழி தோழி சாரல்***
***தழையணி அல்குல் மகளி ருள்ளும்***
***விழவுமேம் பட்டவென் நலனே பழவிறற்***
***பறைவலந் தப்பிய பைதல் நாரை***
***திரைதோய் வாங்குசினை யிருக்கும்***
***தண்ணந் துறைவனொடு கண்மா றின்றே. (குறுந்தொகை - 125)***

*அலைகள்தாமாகவந்துதமக்கு இரைத்தந்தால்அன்றிசிறகுகளின்வலிமையின்மையால், நாரை எங்கும் சென்று இரை தேட இயலாது, அவை அலைகளின் வருகையை எதிர்நோக்கி இருக்கும். அதுபோலத் தலைவியும் தன் அழகை இழந்து தலைவனுடைய வரவை எதிர்நோக்கியுள்ளாள். அலைகளில் மீன் வரவில்லையென்றால், நாரை இறந்துபடும். தலைவன் வரைந்து கொள்ள வரவில்லையானால், தலைவி இறந்துபடுவாள் என்பது இப்பாடல் உணர்த்தும் தலைவியின் பிரிவாற்றாமையை வெளிப்படுத்துகிறது.*

**பிரிவில் அலர் தோன்றும் சூழல்**

***துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை***
***இறை இறைவா நின்றவளை (குறள் - 1157)***

*தலைவனுடைய பிரிவினால் ஏற்பட்ட மெலிவால் என் முன் கையில் இருந்த வளையல்கள் கழன்று வீழ்ந்து விடுவதால் தலைவன் என்னைப் பிரிந்ததைப் பலர் அறிந்து அலர் தூற்றும் நிலை ஏற்பட்டு விட்டதே என்று தலைவி வருந்துகிறாள்.*

*இதனையே பின்வரும் குறுந்தொகை பாடலும் தெளிவு செய்கிறது.*

***“கௌவை யஞ்சிற் காமம் எய்க்கும்***
***எள்ளற விடினே உள்ளது நாணே***
***பெருங்களிறு வாங்க முரிந்துநிலம் படாஅ***
***நாருடை ஒசியல் அற்றே***
***கண்டிசின் தோழியவர் உண்டஎன் நலனே.” (குறுந்தொகை - 112 )***

*தலைவியின் உடல் வேறுபாடு கண்டு ஊரார் கூறும் அலர்மொழிகளுக்கு அவள் அஞ்சினால், காமத்தை துறத்தல் வேண்டும், காமம் முற்றிலும் நீக்கினால் நாணம் ஒன்றே எஞ்சி நிற்கும். தன்னிடம் பெண்மை நலனும், கற்பும் அற்று போய் விடும். அப்பெண்மை நலனும் தலைவனால் முன்னமே கொள்ளப்பட்டமையால் அது தன்னிடம் உயிர் தங்கியிருக்கும் அளவே உள்ளது என்கிறாள் தலைவி.*

*பிரிவின் துயரம் என்பது மன நிலையில் மட்டுமின்றி உடல் நிலையிலும் மோசமான மாற்றத்தை ஏற்படுத்தி விடுகிறது. அதிலும் குறிப்பாக பருவம் எய்திய பெண்கள் பசலை நோயுறுவதை சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையாக காணலாம். வெளியுலக அனுபவங்கள் ஏதுமில்லாத தலைவியானவள் புதிதாக ஒரு ஆடவனைக் கண்டு அவன் மீது அன்பு கொண்டு களவு, கற்பு என்னும் அக வாழ்வை மேற்கொள்ளும் இல்லற மாண்புகள் இல்லாத அக இலக்கியங்களே இல்லை எனலாம். இலக்கியங்கள் தாண்டி இன்றைய இயல்பான வாழ்க்கையிலும் பிரிவின் துயரம் என்பது தலைவன் தலைவியிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவே அமைவதை காண முடிகிறது.*

**பிரிவால் ஊரும் பகையாவது**

***“இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல் அதனினும்***
***இன்னாது இனியார்ப் பிரிவு” (குறள் - 1158 )***

*நம்மோடு அன்பு கொள்ளாத மக்கள் வாழும் ஊரில் இருந்து கொண்டு வாழ்வது என்பது கொடுமையானது அதனை விடக் கொடியது அன்புடைய தலைவரைப் பிரிந்து தனித்து துன்புறுதல் ஆகும் என்கிறாள் தலைவி.*

*இக்குறட்பாவின் கருத்தையொற்றி பின்வரும் குறுந்தொகைப் பாடல் பிரிவின் துயரை விளக்குகிறது.*

***“காதல ருழைய ராகப் பெரிதுவந்து***
***சாறுகொ ளூரிற் புகல்வேன் மன்ற***
***அத்த நண்ணிய வங்குடிச் சீறூர்***
***மக்கள் போகிய வணிலாடு முன்றிற்***
***புலப்பில் போலப் புல்லென்***
***றலப்பென் றோழியவ ரகன்ற வூான்றே” (குறுந்தொகை - 41 )***

*“தோழியே கேட்பாயாக நான் உயிராக நினைக்கும் எம் தலைவன் எம்மோடு உறவாடி என் அருகிலேயே இருக்கும் போது பாலையில் சிறு குடிகளை உடைய இவ்வூரானது விழாக்காலம் பூண்ட பேரூர் போல எனக்கு இன்பம் தருவதாய் இருந்தது. ஆனால் தற்போது பொருள் தேடி என்னை பிரிந்த என் தலைவன் இல்லாத இவ்வூரானது மக்கள் அனைவரும் நீங்கிச் சென்ற அணில் விளையாடும் முற்றத்தையுடைய தனிமை பொருந்திய வீட்டினைப் போல மகிழ்ச்சியற்று விளங்குகிறது என்று தன் பிரிவின் துயரை ஆற்றாமையோடு வெளிப்படுத்துகிறாள் தலைவி.*

**முடிவுரை**

புணர்தல் போன்று பிரிதலும் அக வாழ்க்கையில் நீக்க இயலா வகையில் பிணைந்து வரும் ஒரு கூறாகும். இல் வாழ்வில் ஈடுபட ஆண் மகன் தனக்காகவும் தன் நாட்டிற்காகவும் பிறருக்காகவும் அன்பிற்குரிய தன் தலைவியை சில காலம் பிரிய நேரும், இது இலக்கிய வாழ்விலும் இயல்பான வாழ்விலும் வகுக்கப்பட்ட நியதியாகவே பார்க்கப்படுகிறது. குற்றமற்ற இத்தகைய நற்செயலில் பிரிவு என்னும் தண்டனையை அதிகம் ஏற்பவளாக தலைவியே விளங்குகிறாள். இருப்பினும் தலைவன் தனக்காக விட்டுச் சென்ற நினைவுகளையும், வாய்மொழிந்த நம்பிக்கைகளையும் மனதிற்கொண்டு பிரிவின் ஆற்றாமையை தன் உயிர் தோழியிடம் மட்டுமே வெளிப்படுத்தி தலைவனின் வருகைக்காக பொழுதுகள் பல கடந்து நம்பிக்கையாக காத்திருக்கும் தலைவியின் இல்லற மாண்பு சிறப்பிற்குரியதாகும்.

**துணை நூற்பட்டியல்**


1. குறுந்தொகை மூலமும் உறையும் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
2. திருக்குறள் மூலமும் உறையும் - சென்னைப் பல்கலைக்கழகம்
3. திருக்குறள் எளிய நடை - முனைவர் ப. முருகன்
4. அகப்பொருள் மரபும் திருக்குறளும் - ஆசிரியர். சண்முகம் பிள்ளை (சென்னைப் பல்கலைக்கழகம்)
5. தொல்காப்பியம் பொருளதிகாரம் - உரையாசிரியர்(மா.கோமகன்) சந்தியா பதிப்பகம்.


## References


1. Kurunthogai Moolamum Uraiyum - New Century Book House
2. Thirukkural Moolamum Uraiyum - Madras University
3. Thirukkural Eliya Nadai - Dr. P. Murugan.
4. Agapporul Marubum Thirukkuralum - Tr. Sanmugam Pillai (Madaras University)
5. Tholkaapiyam Porulathigaram - Narrator (M. Komagan) Sandhiya Publisher.